# பியகம பிரதேச சபை
# கம்பஹா மாவட்டம்

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 11 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2014 சனவரி 21 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பியகம பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னர் கிடைக்கப்பெற்ற வீதவரியும் வரி பிரதேச சபை படிவம் 7 இன் படி பெறுமதி கிடைக்கப்பெறாமையின் காரணமாக முன்னர் கிடைக்கப்பெற்ற வருமானக் கணக்கு ரூபா 3,602,741 தொகையால் குறைவாகவும் வீதவரி நிலுவைக் கணக்கின் மீதி ரூபா 242,099 கூடுதலாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட போதிலும் ரூபா 5,481,413 தொகையான வழங்கல்கள் பொதுக் களஞ்சியக் கணக்கிற்கு சீராக்கப்படுவதற்குப் பதிலாக ரூபா 5,316,786 தொகையான திரண்ட

நிதியத்திற்கு சீராக்கப்பட்டிருந்ததுடன் செலவினத் தலைப்புகளுக்கு ரூபா 164,627 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 2,286,040 தொகை நன்கொடையாக கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக களஞ்சியக் கடன்கொடுத்தோர் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 809,434 தொகையான மருந்து இருப்புகள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தின் போதே ஆயுர்வேத விநியோகமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் மருந்து இருப்புகள் தொடர்பாக ஓர் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு இறுதி இருப்புகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 ஆம் ஆண்டின் போது சபையிடம் இருந்த சொத்தான கடவத்தை சந்தையில் 31 கடைகளுக்காக ரூபா 66,026 தொகையும் அதிவேக வீதியை நிர்மாணிப்பதற்காக அரசாங்கத்திற்கு பொறுப்பேற்கப்பட்ட 115 ஆதனங்களுக்காக ரூபா 133,357 தொகையும் பட்டியலிடப்பட்டு வீத வரி கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் வீத வரி வருமானம் ரூபா 199,383 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நிலையான சொத்துப் பதிவேட்டின் படி 10 காணித் துண்டுகளுக்கான ரூபா 9,805,240 தொகை காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) 2012 ஆம் ஆண்டின் போது நிலையான சொத்துக்களை மேம்படுத்துவதற்காக 2 சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,108,345 தொகையான செலவினம் நிலையான சொத்துக்களுக்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த 2 முச்சக்கர வண்டிகளினதும் நீர் பவுஸரினதும் பெறுமதி மோட்டார் வண்டிக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மாகொல பல்நோக்கு கட்டிட நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட வேலை விபரத்தின் படி மத்திய பொறியியல் பணியகத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 4,917,213 ஆன போதிலும் இதற்காக ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2012 திசெம்பர் 07 ஆம் திகதி திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபையால் அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 1,379,000 பெறுமதியான டிராக்டர் இருப்புக் கணக்கு வரவு வைக்கப்பட்டு களஞ்சியக் கடன்கொடுத்தோர் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 10,829,750 தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தன.

**2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,706,928 ஆக இருந்ததுடன் இதற்கு மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 11,461,930 ஆக இருந்தது.

**2.2 நிதி நிர்வாகம்**

1988 பிரதேச சபை நிதி நிர்வாக விதி வழிகாட்டியின் 155 விதி மற்றும் நிதிப் பிரகாணம் 261 (3) இன் பிரகாரம் பிரதேச சபை 10 படிவத்தின் பிரகாரம் பிரதான காசேடு தலைமை அலுவலகத்தில் பேணப்பட வேண்டியதுடன் இதன் பிரகாரம் வங்கிக் கணக்கிணக்கக்கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சபையால் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்கு உரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டவை | உள்ளபடியானவை | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| (i) | வீதவரியும் வரியும் | 56,729 | 27,227 | 50,247 |
| (ii) | வாடகை | 2,176 | 1,441 | 4,168 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,484 | 2,700 | 698 |
| (iv) | ஏனைய வருமானம் | 892 | 968 | 245 |

### 2.3.2 வீதவரி

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான வீதவரியான ரூபா 45,542,135 தொகையான மீதியில் 1 வருடம் முதல் 5 வருடங்கள் வரையான ரூபா 10,913,933 தொகையான மீதியும் 5 வருடங்களுக்கு மேலான ரூபா 1,059,120 தொகையான மீதியும் அறவிடப்படுவதற்கு செயலாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இம் மீதியில் தெல்கொட உப அலுவலகத்திற்கு உரித்தான ரூபா 5,000 மிகையான நிலுவை வரி மீதியான ரூபா 1,033,250 தொகையும் காணப்பட்டது.

**2.3.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,146,620 தொகையான 1 வருடம் முதல் 5 வருடங்கள் வரையானதும் 5 வருடங்களுக்கு மேல் நிலுவையான வியாபார அனுமதிப்பத்திர மீதியை அறவிடுவதற்கு செயலாளர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3.4 கடவத்த சந்தை கடைகளை வாடகைக்கிடல்**

59 கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 1989 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இக் கடை 20 ஆண்டுகளுக்கு மேலான காலமாக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2013 ஆகஸ்ட் 27 ஆம் திகதி வரையிலும் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 ஏனைய வருமானங்கள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1 வருடத்திற்கு மேற்பட்ட 5 வருடங்களுக்கு குறைவாக நிலுவையான வியாபார நிலைய வாடகையான ரூபா 398,878 தொகையும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவையான வியாபார நிலைய வாடகை மீதியான ரூபா 3,555,310 தொகையும் அறவிடப்படுவதற்கு செயற்பட்டிருக்கவில்லை.

**2.4 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

(அ) குறைந்த வருமானம் பெறும் 23 குடும்பங்களுக்காக குளியலறைகளை நிர்மாணிப்பதற்கு ஒருவருக்கு ரூபா 20,000 படி ரூபா 460,000 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் பணம் உரிய பணிக்காகப் பயன்படுத்தப்பட்டமை குறித்து பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்காக கட்டிடப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 5,394,975 தொகை

செலுத்தப்பட்டிருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைகள் தொழிநுட்ப அறிவுடைய ஓர் உத்தியோகத்தரால் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.5 மாவட்ட ஒப்பந்த நிர்வாகம்**

**-----------------------------**

மாகொல பல்நோக்குக் கட்டிட நிர்மாணிப்பு

-----------------------------------------------------------------------

கம்பஹா நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாகாண சபை நன்கொடைகளின் மூலம் பியகம பிரதேச சபை பயன்பாட்டிற்காக மாகொல பல்நோக்குக் கட்டிட நிர்மாணிப்பிற்காக சபையும் மத்திய பொறியியல் உசாவுகைப் பணியகமும் 2002 ஆம் ஆண்டின் போது ரூபா 17,380,000 தொகையான உடன்படிக்கை ஏற்படுத்தியிருந்தன. நிர்மாணிப்புகளுக்காக ரூபா 7,000,000 தொகை 2002/2003 ஆம் ஆண்டுகளின் போது செலவிடப்பட்டிருந்ததுடன் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபைக்கு சட்டரீதியான உரித்தற்ற காணியில் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2 ரூட், 35.2 பேர்ச் அளவிலான இக் காணி முதலீட்டுச் சபைக்கு 1991 நவம்பர் 22 ஆம் திகதி பியகம பிரதேச செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. தற்போது இக் காணி மீள பிரதேச செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்ட போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2013 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரையிலும் இக் காணியின் உரித்து தீர்க்கப்பட்டு சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிர்மாணிப்பு ஒப்பந்தம் வழங்கப்படுகையில் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இச் செயற்திட்டத்தின் அவசரத்தினால் 03 மாதங்களுக்குள் வேலை பூர்த்தி செய்யப்படுவதற்கு ‘‘டேர்ன்கி’’ முறைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு கணக்காய்வுத் தினத்தன்று 11 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அவ் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்படக்கூடிய நிலைக்குக் கொண்டுவரப்பட்டிராமை 2013 ஆகஸ்ட் 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) 2004 ஏப்ரல் 15 ஆம் திகதியளவில் பூர்த்திசெய்யப்பட்ட வேலை தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 4,917,243 தொகை சபைக்கு பணப்பற்றாக்குறை போன்ற காரணங்களால் ஒப்பந்தங்களுக்குச் செலுத்தப்படாது நிர்மாணிப்பு நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. 2012 ஆம் ஆண்டிற்காக பாதீட்டு ஏற்பாடுகளில் ரூபா 10 இலட்சத்திற்கான காசோலைகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 செயற்பாட்டு திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நூலகப் புத்தக மெய்மையாய்வு அறிக்கையின் படி மெய்மையாய்விற்கு சமர்ப்பிக்கப்படாத புத்தகங்களின் எண்ணிக்கை 1,277 ஆகக் காணப்பட்டதுடன் இதில் 615 புத்தகங்கள் முன்னைய ஆண்டின் போது காணாமற் போன புத்தகங்களும் காணப்பட்டன. இது தொடர்பாக அரசாங்க நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படுவதற்காக முறையான ஆய்வுகள் நடாத்தப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேல் மாகாண வருமான ஆணையாளரின் 2012 ஒக்டோபர் 18 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் சபைக்குக் கிடைக்கப்பெற வேண்டிய ரூபா 4,270,360 தொகையான முத்திரைக் கட்டணம் தொடர்பாகக் காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் சீராக்கப்பட்டு மீளச் சமர்ப்பிக்குமாறு அறிவித்திருந்த போதிலும் சபையால் 2013 ஆகஸ்ட் அளவிலும் இதன் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 வாகனம் வாடகைக்குப் பெறப்படல்

2012 ஆம் ஆண்டின் போது சபையால் சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குப்பைகள் அகற்றப்படுவதற்காக 10 டிராக்டர்களும் லொறி ஒன்றும், மின்சார நடவடிக்கைகளுக்காக 04 முச்சக்கர வண்டிகளும், வீதிப் பிரிவின் நடவடிக்கைக்காக லொறி ஒன்றும் டிப்பர் வண்டியும், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதற்காக ரூபா 10,828,150 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதிவுச் சான்றிதழ் மற்றும் காப்புறுதி அனுமதிப்பத்திரத்தின் பிரதி பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) வாடகைக்கு எடுக்கப்பட்ட வாகனத்திற்காக பூரணக் காப்புறுதி ஒன்று பெறப்பட வேண்டிய போதிலும் இவ் வாடகை வாகனத்திற்காக மூன்றாம் தரப்பினருக்கான காப்புறுதி பெறப்பட்டிருந்தது.

(ஈ) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9 ஆம் பந்தியின் படி முறையான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) வாடகைக்குப் பெறப்பட்ட 06 வாகனங்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகையில் நாளொன்றிற்கு ஓடப்பட வேண்டிய ஆகக் குறைந்த கிலோமீற்றர்களின் எண்ணிக்கை ஓடப்படாதிருந்த போதிலும் மொத்தத் தொகையும் செலுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 375,600 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) ஓட்ட அட்டவணைகள் முறையான வகையில் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) 06 முச்சக்கர வண்டிகள் மின்சார நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டமைக்கு மின்சாரப் பிரிவின் பொருள் வழங்கல் மாதிரிப் படிவத்தின் படி உறுதிப்படுத்தப்பட்டிராத போதிலும் அந் நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்பட்டதாக 39 நாட்களுக்காக ரூபா 58,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) சபைக்குரிய 4 டிராக்டர்கள் பழுதுபார்க்கப்படாது நீண்ட காலமாகத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது 03 டிராக்டர்களும் டிரேலர்களும் நன்கொடையாக சபைக்கு கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கையில் குறைவு காணப்பட்டிருக்கவில்லை. 2013 ஆகஸ்ட் 30 கணக்காய்வுத் தினத்தன்றும் 7 டிராக்டர்கள் வாடகைக்குப் பெறப்பட்டிருந்தன.

(ஐ) வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த சில வாடகை வாகனங்கள் சபையின் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களிடம் உள்ளதாகவும் வேறு பெயரில் வாடகை வாகனம் சபையில் ஈடுபட்டுள்ளதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

**2.8 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புகளை மேற்கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) குப்பைகள் அகற்றப்படுவதற்காக நாளொன்றிற்கு ரூபா 3,400 படி 05 டிராக்டர்களுக்காக ஒரு வருடத்திற்கு ரூபா 6,120,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையால் 2012 ஆம் ஆண்டின் போது குப்பைகள் அகற்றப்படுவதற்காக ரூபா 8,010,350 கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 1,890,350 இல் மதிப்பீடு மிகைத்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) குப்பைகளை அகற்றுவதற்காக மல்வானையில் உள்ள காணி ஒன்று பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அக் குப்பைகளை மூடுவதற்காக மண்ணிடப்பட்டு சமப்படுத்தப்படுவதற்காக மண் கியூப் ஒன்று ரூபா 1,900 படி ஒரு வருடத்திற்கு 1,440 இற்காக ரூபா 2,736,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டிற்காக 2650 மண் கியூப் பயன்படுத்தப்பட்டு ரூபா 4,590,000 தொகை செலுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 1,854,000 தொகையால் மதிப்பீடு மிகைத்துக் காணப்பட்டது.

(ii) குப்பையிடும் இடத்திற்கு மண் பெற்றுக்கொள்ளப்படுகையில் அவ்விடத்திற்கு நேரடியாகக் கொண்டு செல்லப்பட்டிருந்தது. மண் கொண்டுவரப்படும் சந்தர்ப்பத்தில் சபையின் அதிகாரப் பொறுப்புடைய உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பிற்கோ அல்லது ஆய்விற்கு உட்படுத்தப்பட்டிராததுடன் அந் நிலையில் உள்ள பதிவேடுகளைப் பேணும் தொழில் உத்தியோகத்தரால் வாகனத்தின் நீளம், அகலம் மற்றும் உயரத்தின் படி கியூப் அளவுகள் கணிப்பிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

நாள்தோறும் மண் கொண்டு வரப்பட்ட போதிலும்தொழிநுட்ப உத்தியோகத்தரால் மூன்று நாட்களுக்கு ஒரு தடவை பரீட்சிக்கப்பட்டு இதன் படி ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக நிலவும் உள்ளகக் கட்டுப்பாடு நலிவான நிலையில் காணப்பட்டதுடன் இதற்காகச் செலுத்தப்படும் தொகையில் பொருளாதாரம் மற்றும் ஆக்கபூர்வம் தொடர்பாகக் கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

(iii) மண் பதனிடப்படுவதற்காக மினி ஸ்கேட்டர் ஒன்று மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 2,750 படி ஒரு வருடத்திற்கான செலவினம் ரூபா 2,970,000 ஆக மதிப்பிடப்பட்டிருந்தது. இதற்காக ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 4,500 படி மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 4,305,000 ஆகக் காணப்பட்டதுடன் மதிப்பீடு மிகைப்பட்ட தொகை ரூபா 1,335,000 ஆகக் காணப்பட்டது.

(iv) நாளுக்கு ஒரு தடைவ இயந்திரத்தின் மூலம் மண் குப்பைகளை மேலே எடுக்கப்பட்டு பதனிடுவதாகக் குறிப்பிடப்பட்ட போதிலும் இது கண்காணிப்பு உத்தியோகத்தரின் முன்னிலையில் நடைபெறுவதாகத் தென்படவில்லை.

(இ) குப்பைகள் அகற்றப்படுவதற்காக வாடகை அடிப்படையில் டிராக்டர் பெற்றுக்கொள்ளப்படுவதற்கும் மண் பதனிடப்படுவதற்குமாக இயந்திரம் பெறப்படுவதற்குப் பதிலாக ரூபா 12,315,350 செலவிடப்பட்டமை பொருளாதார மற்றும் ஆக்கபூர்வமற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) குப்பைகள் அகற்றப்படும் செயற்திட்டத்தின் ஒரு நோக்கமாக நிலக்கீழ் நீர் முறைமை மற்றும் நீர் வழி மாசடைவதைத் தடுப்பதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் குப்பைகள் இவ்வாறு குவிக்கப்படுவதால் அந் நோக்கம் எய்தப்படாமையும் குப்பைகள் அகற்றப்படும் இடம் அருகில் அமைந்துள்ள களனி கங்கை வெள்ளப்பெருக்கு ஏற்படுமாயின் சுற்றுச்சூழலுக்கு தாக்கம் நேரும் என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தால் இச் செயற்திட்டத்திற்கான அங்கீகாரம் வழங்கப்பட்ட கடிதத்தின் 6 ஆம் பந்தியின் படி சம்பத் பியச மற்றும் சம்பத் கேந்ர பயன்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) குப்பைகள் சபையின் சொத்தானமையால் இது தொடர்பாக கருத்திற்கொள்ளப்பட்டு குப்பை உருவாகும் இடங்களிலேயே வகைப்படுத்தப்பட்டு அவை உரிய வகையில் மீள்சுழற்சி செய்யப்படுவதற்கு அல்லது சேதனப் பசளை உற்பத்திசெய்யப்பட்டு வருமானத்தை ஈட்டுவதற்கேனும் கவனம் செலுத்தப்பட்டிராமை சபையின் சொத்தான குப்பையை அகற்றுவதற்கு 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 21,955,584 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) வாகனப் பயன்பாடு